MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# திருக்குறளும் இல்லறக் கடமைகளும்

முனைவர் இ.சேனாவரையன்

தமிழ் இணைப் பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641018.

# Thirukkural and household duties

Dr. E. Senavarayan

Associate Professor of Tamil
Government Arts College (Autonomous)
Coimbatore – 641018

## ABSTRACT

"Duty" is a moral or ethical obligation; and "responsibility" is a legally binding obligation under existing international law. Wikipedia states that the Declaration of Human Rights and Duties (DHDR) was written under the auspices of UNESCO to strengthen the implementation of human rights (1). Since duty means responsibility, it is necessary to examine the duties that are responsible for the well-being of the family. This article examines the duties of the family in the way of Thirukkural for the husband and wife to live happily in the family.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

## முன்னுரை

“கடமை" என்பது ஒரு நெறிமுறை அல்லது தார்மீக கடமை; மற்றும் "பொறுப்பு", தற்போதுள்ள சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட ஒரு கடமை. மனித கடமைகள் மற்றும்

பொறுப்புகளின் பிரகடனம் (DHDR) யுனெஸ்கோவின் அனுசரணையில் மனித உரிமைகளை செயல்படுத்துவதை வலுப்படுத்துவதற்காக எழுதப்பட்டது (1) என விக்கிபீடியா குறிப்பிட்டுள்ளது.
கடமை பொறுப்பு என்னும் பொருளைக் குறிப்பதால் இல்லறம் சிறக்க பொறுப்புள்ள கடமைகள் குறித்து ஆராய்வது அவசியமாகும். தலைவனும் தலைவியும் இல்லறத்தில் இனிது வாழ திருக்குறள் வழியில் இல்லறக்கடமை குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

## இல்வாழ்க்கையும் கடமைகளும்

இல்லறத்தில் வாழும் சிறப்புடையவர்கள் தலைவனும் தலைவியும் ஆவர். தலைவன் கல்வி, மனைத்துறவு, துறவு என்னும் அறநிலைகளிலுள்ள மூவர்க்கும் நல்ல ஒழுக்க நெறியில் உறுதியான துணையாகத் திகழ வேண்டும் என்னும் கடமை அறிந்து செயல்படுபவனாக இருக்க வேண்டும் என்பதைத் **திருவள்ளுவர்**
**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை (41வது குறட்பா)** என்னும் குறட்பா வழி உணர்த்தியுள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**உடையான் வழக்கினிது ஒப்ப முடிந்தால்**
**மனைவாழ்க்கை முன்இனிது மாணாதாம் ஆயின்**
**நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்**
**தலையாகத் தான்இனிது நன்கு**
**( 2)**

உடையான் என்றால் வாழ்க்கையின் பொருளை நன்குணர்ந்தவன் என்று பொருள். இது இனியது ஆகும். மனைவி உள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கை என்னும் கடமையை ஆற்றுவது மிக இனிது ஆகும். வாழ்க்கை நிலையாமை அறிந்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்தல் என்னும் கடமை மிக இனிது. கோபம் , வெறுப்பு, பொறாமை, போன்ற தீய எண்ணங்களை விட்டு துறவு செய்யும் கடமை மிக இனிது ஆகும் என்று இனியவை நாற்பது கூறுகின்றது.

இதனை நன்னெறியில்

**காதல் மனையாளும் காதலனும் தீதீல் ஒருகருமம் செய்யவே- ஓதுகலை**
**எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தால் நோக்கல்தான்**
**கண்ணிரண்டும் ஒன்றையே காண்**

என்னும் பாடலை ஒப்பிட்டு நோக்கலாம்.

மேலும் அறநெறிச்சாரத்தில்,

**மருவிய காதல் மனையாளுந் தானும்**
**இருவரும் பூண்டுய்ப்பின் நல்லான்- ஒருவரான்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்**
**செல்லாது தெற்றிற்று நின்று** (3)

என்னும் பாடலும் இல்லறத்தின் கடமையும் மேம்பாடும் பற்றிக் கூறியுள்ளது.

இதனை தெய்வப்புலவர் வள்ளுவரும்

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டதே இல்வாழ்க்கை. அதுவும் பிறர் பழிக்கும் தீமைகள் இல்லையானால் சிறப்புடையதாகும் என்பதை

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**

**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.**(குறட்பா49,)

இல்வாழ்க்கை அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளார். இதன் வழி இல்லறத்தினை அறவழியில் நடத்த வேண்டிய கடமை உணர்வை வலியுறுத்திக் கூறியுள்ளமைக் காணலாம்.

**இல்வாழ்க்கையும் நற்கடமையும்**

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை.**

என்னும் குறட்பாவின் வழி உணர்த்தும் கடமை நன்னெறி என்பது இல்வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் வாழ்கின்ற வாழ்வில் முற்றும் துறந்த துறவியர்க்கும், வறுமையில் வாடும் ஏழைக்கும், ஆதரவின்றி இறந்தவர்க்கும் இல்வாழ்க்கையிலிருப்பவன்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

துணையாக இருந்து செயலாற்றுவது நற்கடமையாகும் என அறிவுறுத்தியுள்ளார்.

**இல்வாழ்வும் தலையாயக்கடமையும்**

**வள்ளுவர்,**

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றா ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (43வது குறட்பா)**

என்னும் குறட்பாவின் மூலம்,

இல்வாழ்வில் தலைவனும் தலைவியும் அறம் சார்ந்த செயல்களைச் செய்கின்ற கடமைப்பாடுடையவர்களாகத் திகழ வேண்டும். தென்புலத்தார், கடவுள், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்து வகையாளரிடத்தும் செய்ய வேண்டிய அறச் செயல்களைத் தவறாமல் ஒருவன் செய்தல், சிறந்த கடமை என வள்ளுவர் வலியுறுத்தியுள்ளமை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.

**இல்லறமும் பழி அஞ்சலும்**

**இல்லற வாழ்வில் நன்னெறியைக் கடைப்பிடித்தல் முக்கிய கடமையாகும். நன்னெறி தவறினால் பழி வந்து சேரும் என்னும் விழிப்புணர்வு வேண்டும். இதனை வள்ளுவர்,**

**“பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்”.(44வது குறட்பா)**

என்னும் குறட்பா மூலம் இல்லறத்தில் தலைவனும் தலைவியும் தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் மற்றவர்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்தும் என்றால் அதன் விளைவு பழி ஏற்படும். இத்தகையப் பழிக்கு அஞ்சுதல் வேண்டும் என்னும் கடமையைப் பின்பற்றவேண்டும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

தலைவனும் தலைவியும் தங்கள் வாழ்வில் நல்வழியில் வந்த பொருளைப் பகுத்து உண்ணுதல் என்னும் கடமையை ஆற்ற வேண்டும். வள்ளுவர் கூறிய மேற்காணும் இரண்டும் ஒருவனது இல்வாழ்க்கையில் இருந்தால், அவனது சந்ததி எப்போதும் குறைவது இல்லை என்பதால் இக்கடமையை கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டவேண்டும்.

**அன்பும் அறமும் கடமைகளும்**

வள்ளுவர் உலக மக்கள் இனிது வாழ இல்வாழ்வில் அன்பும் அறமும் பின்பற்றி வாழும் கடமைகளை,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.(45வது குறட்பா)**

என்னும் குறட்பாவின் வழியாக இல்வாழ்க்கையில் கணவன் மனைவியருக்கிடையே அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும் என்பது வள்ளுவர் வகுத்த நெறி. எனவே, அன்பை வெளிப்படுத்தும்

கடமையும், அறவழியில் வாழ்வை வடிவமைத்துக் கொள்வதும் கணவன் மனைவி இருவருக்கும் உள்ள கடமையாகும் என்று வள்ளுவப்பெருந்தகைக் கூறியுள்ள கடமைகளைப் பின்பற்றி வாழ்தல் நலமாகும்.

**இல்லறமே நல்லறம்**

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவது எவன். (குறள் 46)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

இல்வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கையை அறவழியில் வாழ முற்படும்போது அனைத்து பலன்களையும் பெறக்கூடியவர்களாகத் தகுதி பெற்று விடுவார்கள்.

எனவே வேறு வழியில் சென்று பயன் பெற வேண்டியது இல்லை. அறவழி வாழ்க்கை வாழ முயற்சிக்கும் கடமை மிகவும் பாராட்டுக்குரியது என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள்**
**எல்லாம் தலை. ( குறள் 47)**

என்னும் குறட்பாவின் மூலம்,
இல்வாழ்க்கையில் தலைவனும் தலைவியும் வாழ்ந்து, அதற்குரிய வழிகாட்டு நெறிமுறைப்படி நல்ல முறையிலே வாழ்கின்றனர் என்றால் அவர்கள் மறுமை இன்பத்தை நாடி முயற்சி செய்கின்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாகக் கருதப்படுவர். எனவே சான்றோர் வகுத்த நெறியும் தலைவியின் உள்ளம் அறிந்து மகிழ்விக்கும் வாழ்வை வாழ மேற்கொள்ளும் கடமைகளும், தலைவி வாழ்வியல் நெறியைப் பின்பற்றி வாழ மேற்கொள்ளும் கடமையும் அனைத்து செயல்பாடுகளைக் காட்டிலும் சிறப்புக்குரியது ஆகும்.

**ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**
**(குறள்48)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

இயற்கையானது தனக்கென ஒரு நெறிமுறையை லகுத்துக்கொண்டு அனைத்து உயிர்களையும் வாழச்செய்கிறது. அது போன்று இல்லற

வாழ்வில் அறவாழ்வு என்னும் நெறியைக் கடைப்பிடிப்பவர்கள் தவம் செய்கின்றவர்களையும் நன்னெறி வழியில் ஒழுகச் செய்து, தங்களது வாழ்வையும் அறநெறியில் தவறாது நின்று வாழ்பவர்களின் இல்வாழ்க்கையானது, தவம் செய்வாரைவிட மேலான வல்லமை உடையதாகும் என்பதை உணர்ந்து இல்லறக் கடமை ஆற்ற வேண்டும்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள்**
**வைக்கப் படும். (குறள்50)**

இக் குறட்பாவின் மூலம் இந்த உலகத்தில் வாழ்வியல் நெறிகள் என்று அனுபவம் மிக்கவர்களால் இல்வாழ்க்கையின் கடமைகளைப் பின்பற்றி வாழும் தலைவன் தலைவி ஆகியோர் இறைவன் என்று போற்றப்படும் உயர்நிலைப் பெறுவர் வள்ளுவர் கூறும் நன்னெறியைப் பின்பற்றி வாழ்வது வாழ்வியலில் வளம் சேர்க்கும்.

**முடிவுரை**

ஒவ்வோருவர் வாழ்விலும் கடமைகளைப் பின்பற்றி நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும். குறிப்பாக உலகம் இயங்குவதில் மனிதர்களின் பங்களிப்பு மிக இன்றியமையாதது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

உலக இயக்கத்தில் இன்றியமையாத மனிதர்களின் வாழ்வில் பல கடமைகளைப் பின்பற்ற வேண்டும்.
அவற்றுள் வள்ளுவர் கூறிய இல்லறக்கடமைகளை ஆற்ற வேண்டிய வழிமுறைகளும் அவற்றின்

வாழ்வியல் பயனும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. அன்பும், அறநிலையும், பழிக்கு அஞ்சுதலும், பெரியோரைத் துணைக்கோடலும், சான்றோர் கூறிய அறம் சார்ந்த கருத்துக்கள், கோபம், பொறாமை, பொறுமையின்மை, பிறன் விழையாமை போன்றவற்றை களைந்து வாழ்தல், சுயநலம் பேணாத துறவு நிலை ஆகியவைக் கடைப்பிடித்து வாழ்வது கடமையாகும். இதனால் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த தலைவன் என்றும், வாழ்வாங்கு வாழ்ந்த தலைவி என்றும் உலகத்தவரால் போற்றப்படுவர் என்னும் வள்ளுவ நெறியைக் கடைப்பிடித்து வளமோடு வாழ என வழிகாட்டுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. விக்கிபீடியா இணைய தளம்
2. இனியவை நாற்பது, ப.7, பூதஞ்சேந்தனார்)
3. மேலது
4. மேலது